160

DEPUTY ... 11 MAY 19..

அமெரிக்காவைப் பார்!

OFFICE OF THE REGISTRAR OF ...
1 - FEB 1944
MADRAS

கும்பகோணம்
எஸ். ஏ. ரஹீம்

தமிழ்ப் பண்ணை

அச்சமில்லை

ராஜாஜி

எழுதிய வேதாந்த புத்தகம்

விலை அணா எட்டு

COVER DESIGNED & PRINTED BY
P. A. S. PRESS, POST BOX 349
MOUNT ROAD :: MADRAS

நாடகமே உலகம்

நாடோடி

எழுதிய ஹாஸ்ய கட்டுரைகள்

விலை ரூ. 1-4-0

தற்காலப் பிரச்னைச் சுடர் 3

அமெரிக்காவைப் பார்!

கும்பகோணம் எஸ். ஏ. ரஹீம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 FEB 1944
MADRAS

973

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் :: சென்னை

முதற் பதிப்பு : அக்டோபர் 1943

சகல உரிமைகளும்
தமிழ்ப் பண்ணையாருக்கே.

விலை அணா 8.

ஹிந்தி பிரசார பிரஸ்,
தியாகராயநகர், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - FEB 1944
MADRAS

அமெரிக்காவைப் பார்!

அமெரிக்காவைப் பார்ப்பதற்கு ருஷ்யாவின் மார்க்கமாகச் செல்லுவோம். ஏன்? உலகத்தின் எதிர் கால சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சிகள் ருஷ்யாவில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ருஷ்யாவின் மீது ஜெர்மனி போர் தொடுத்து, முன்னேற்றமடைந்து கொண்டே போனதைக் கண்டு உலகம் நடுங்கியது. நாஜி ஜெர்மனியின் அந்த முன்னேற்றம் எந்த விபரீதத்தில் கொண்டு போய் விடுமோ என அரசியல் வாதிகள் திகிலடைந்தனர். உலகத்தி லுள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் அதைத் தங்கள் குடும்பத்திற்கு வந்த ஆபத்தென நினைத்தனர்.

பனிக் காலம் நாஜிகளின் முன்னேற்றத்தைத் தடைப் படுத்தியது. ருஷ்யர்கள் தாங்கள் முதலில் இழந்த சில விடங்களைத் திரும்பவும் பிடித்தனர். மீண்டும் வசந்த காலம் ஆரம்பமானவுடன் நாஜிகளின் முன்னேற்றமும் தொடர்ந்தது. இம்மாதிரியே இரு வருஷங்கள் கழிந்தன. ஆனால் இந்த வசந்த காலத்தில் நாஜிகள் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றனர். யுத்த ஆரம்பத்தில் ஏற்பட்ட ஜெர்மானியரின் முன்னேற்றம், இன்றைய பின்வாங்குதலுக்கு ஏறக் குறைய சரியாக இருக்கும்.

மாஸ்கோவின் மதில்களில் எதிரொலியைக் கிளப்பிக் கொண்டிருந்த நாஜி பீரங்கிகளின் சப்தத்தை, இன்று ருஷ்ய மக்களின் சக்தி ஜெர்மனியின் மதில்களை நோக்கி விரட்டிக் கொண்டிருக்கிறது. இந்த சக்தி ருஷ்யர்களிடையே எப்படி உண்டாயிற்று?

ஜெர்மனியின் முன்னேற்றம் ருஷ்ய மக்களுக்கு பழைய ஜார் ஆட்சியை ஞாபகமூட்டியிருக்க வேண்டும். ஜெர்மனி வெற்றியடைந்து விடுமானால் மறுபடியும் தங்கள் நாட்டில் ஜார் ஆட்சி தோன்றி நிலைத்து விடுமோ என்ற பீதி ருஷ்யர்களுக்கு அச் சக்தியை அளித்திருக்க வேண்டும்.

ஜார் ஆட்சியில் ருஷ்யாவின் நிலைமை எப்படி இருந்தது? அதிகம் வளர்க்காமலே சொல்லி விடலாம். 1943-வது வருஷ இந்தியாவின் நிலைமை ஏறத் தாழ சரியாக இருக்கலாம்.

நேபோலியனுடைய ஆட்சியைக் கண்ட பிரான்ஸ், இந்த மகா யுத்தத்தில் சில மாதங்களில் சரணடைந்தது. இதர ஐரோப்பிய தேசங்கள் வாரக் கணக்கில் தான் சண்டையிட்டன. ஆனால் ருஷ்யா சரணடையுமா? ஒருக்காலும் இல்லை. கடைசி ருஷ்யன் இருக்கும் வரை எதிர்த்தே தீருவான். இந் நிலைமையை உண்டாக்கியது அங்குள்ள புதிய அரசியல் அமைப்புத்தான். அதை எவரேனும் மறுக்க முடியுமா?

ருஷ்யாவில் எத்தனை ஜாதிகள், மதங்கள் இருந்தன என்று கணக் கெடுத்துப் பார்த்தால்

இந்தியாவில் இன்றிருப்பதற்கு ஒன்றும் குறைந்திராது. இருபத்தைந்து வருஷ புதிய ஆட்சியில் பொருளாதார நிலை எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறதென்று ருஷ்ய—ஜெர்மன் போர் தெளிவாக்குகிறது. தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, கலை வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி இவற்றில் இன்று ருஷ்யா தலை சிறந்து விளங்குகிறது. பொதுவாக எல்லாத் துறைகளிலும் ருஷ்யா உலகம் பிரமித்துப் போகக் கூடிய நிலையில் முன்னேறி யிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

நூற்றைம்பது வருஷ பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் முன்னேற்றத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆராய்ச்சி சாலையின் அவசியம் இல்லை. இந்தியா சுதந்திர மடைவதற்கு லாயக்கில்லாதிருக்கிற தென்று பிரிட்டிஷார் பறை சாற்றுகிறார்கள். இந்தியாவின் முன்னேற்றத்தைக் குறிப்பிட இது ஒன்றே போதும். ஜார் ஆட்சியின் போது ருஷ்ய மக்கள், தாங்கள் திறமை யற்றவர்கள் என்று கருதிக் கொண்டு அரசாங்கத்தைக் கைப்பற்ற முற்பட்டிருக்காவிட்டால், இன்றைய சோவியத் ருஷ்யா ஏற்பட்டிருக்குமா? இருபத்தைந்து வருஷ ஆட்சியில் சோவியத் அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கும், நூற்றைம்பது வருஷ பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் எதை ஒப்பிடலாம்? எவரஸ்ட் சிகரத்தையும் பக்கத்துள்ள பள்ளத்தாக்கையும் தான் ஒப்பிட முடியும்

அதைத் தவிர வேறு எதையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது.

ருஷ்யா என்றவுடன் ஒரு பரந்த பூமியின் தோற்றம் நம் கண் முன் காட்சி யளிக்கிறது. பரந்த பூமி தான். ஆனால் பல சிறு நாடுகள் சேர்ந்தது தான் அப் பரந்த பூமி. இரு பெரிய கண்டங்களிலும் அப் பூமி பரந்து கிடக்கிறது. ஆசியா ஐரோப்பா இந்த இரண்டு கண்டங்களின் வேறுபட்ட நாகரிகமும், கலாசாரமும் இருபத்தைந்து வருஷ புதிய ஆட்சியில் ஒன்ருக்கப் பட்டிருக்கின்றன.

வியாதிகளில் காலரா, பிளேக் இவற்றை கொள்ளை நோய்கள் என்று சொல்வதுண்டு. அரசியலில் பாஸிஸம், நாஜீயம் இவற்றை கொள்ளை நோய்களுக்கு ஒப்பிடலாம். மனித சமூகம் கொள்ளை நோய்களால் தீண்டப் படாமல் எப்படி பாதுகாக்கப் படவேண்டுமோ, அதே போன்று உலக அரசியல் அமைப்புகளில் பாஸிஸ, நாஜீய நோய்கள் புகுந்து விடாமல் பாதுகாக்க வேண்டும். அதைத் தான் ருஷ்யா செய்து கொண்டிருக்கிறது.

நாஜீயமும், பாஸிஸமும் ஐரோப்பாவில் பலமடைந்ததற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று சென்ற மகா யுத்தத்தின் வர்ஸேல்ஸ் உடன்படிக்கை. இரண்டாவது பிரிட்டனின் அயல் நாட்டுக் கொள்கை. இவ் விரண்டைப் பற்றியும் விவரித்து எழுதவேண்டிய அவசியம் இல்லை. எல்லாருக்கும் தெரிந்த விஷயம் தான். அதன்

பலனைத் தான் இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ருஷ்யாவில் ஆரம்பிக்கப் பட்ட நாஜி நடவடிக்கை பிரிட்டனில் ஆரம்பிக்கப் பட்டிருந்தால் நிலைமை எவ்வாறிருந் திருக்குமென சொல்ல முடியாது.

பாஸிஸ இத்தாலியின் பலம் என்ன? அபிஸீனியாவில் வருஷக் கணக்கில் சண்டை போட்ட வீரர்கள்! ஜெர்மனியின் நட்பே அதை பலம் பொருந்திய நாடாகச் செய்தது. அது மட்டுமா? இத்தாலி பலப்படுவதற்கு பிரிட்டனின் அயல் நாட்டுக் கொள்கையும் ஒரு முக்கிய காரணமாக விளங்கிற்று.

ருஷ்யாவின் இரண்டாம் போர் முனைக் குரல் ஓயக் கூடிய சந்தர்ப்பத்தில் இத்தாலியின் மீது நேச தேச நடவடிக்கை ஆரம்பமாயிற்று. இந்த நடவடிக்கைக்கு, ருஷ்யப் போர் முனையில் ருஷ்யாவின் கை ஓங்கியது தான் காரணம். இந்தியாவிற்கு வழி கண்டு பிடிக்கச் சென்ற மாலுமிகளுக்கு "நன்னம்பிக்கை முனை" தைரிய மூட்டிய மாதிரி நேச தேசங்களுக்கு ருஷ்ய முன்னேற்றம் தைரிய மூட்டியது.

இத்தாலியின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை இரண்டாம் போர் முனை யெனக் கூறப் படுகிறது. ஐரோப்பாவில் அது இரண்டாம் போர் முனை தான். ஆனால் ருஷ்யா எதிர்பார்த்த போர் முனை யல்ல.

சென்ற ஆண்டின் ஆரம்பத்திலேயே இரண்

டாம் போர் முனையை ஐரோப்பாவின் மேற்குக் கரையில் ஆரம்பித்திருந்தால் ஹிட்லரின் திட்டம் குலைந்து போயிருக்கலாம், என்ற பலமான அபிப் பிராயமும் இருக்கிறது. தூரக் கிழக்கே ஜப்பா னேடு சண்டை யிடுவதில் தன் கவனத்தைச் செலுத்தவேண்டி யிருந்தது பிரிட்டன். மேலும் ஆப்ரிக்கப்போர் நடந்து கொண்டிருந்தது. ஆப் ரிக்காவில் கியாதி வாய்ந்த ஜெர்மன் சேனுதிபதி ரோமெல் இருந்தான். அந்த சந்தர்ப்பத்தில் மேற்கு ஐரோப்பாவில் நேச தேச நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டிருந்தால் ஹிட்லரின் பாடு அதோ கதி தான். அடிமை யாக்கப்பட்ட ஐரோப் பிய தேசங்களின் கிளர்ச்சி அதிகக் காற்றடிக்கப் பட்ட பலூன் வெடிப்பதைப் போலக் கிளம்பி யிருக்கும். யுத்தமே ஒருக்கால் முடிந்தாலும் முடிந் திருக்கலாம்.

ஆப்ரிக்கப் போர் முனை யிலிருந்து நாஜிகள் வாபஸ் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த மாதிரி ருஷ்யாவிலும் அக் கட்டத்தை அடைந்து கொண் டிருக்கிறார்கள். இரண்டு வருஷமாக ருஷ்யர்கள் புரியும் போர், அணைந்து கொண்டிருந்த விளக் கிற்கு எண்ணெய் ஊற்றிய மாதிரி, பிரிட்ட னுக்கும், அமெரிக்காவுக்கும் உதவியது. இப்படி உதவ முடிந்ததின் காரணம் ருஷ்யா சுதந்திர முள்ள தேசமாக இருப்பதால் தான். ருஷ்யா எப் படி சுதந்திர மடைந்தது?

1917ம் வருஷம். மகா யுத்தம் நடந்து கொண் டிருந்த காலம். அந்த வருஷத்தில் தான் ருஷ்யப்

புரட்சி நடந்தது. அப் புரட்சி மகா யுத்த காலத்தில் நடந்திருக்காவிட்டால் புரட்சிக் காரர்களுக்கு வெற்றி கிடைத்திருக்குமா? ருஷ்யாவின் புதிய அமைப்பைக் கண்டு மிரளும் முதலாளித்துவ நாடுகள் புரட்சிக் காரர்களை அடக்குவதற்கு வேண்டிய உதவிகளை ஜார் அரசாங்கத்திற்கு வலுவில் செய்திருக்கமாட்டார்களா? இன்றைய புதிய அரசியல் அமைப்பு ஏற்படுவதற்கு சந்தர்ப்ப மில்லாமலே ஒருக்கால் போயிருந்தாலும் போயிருக்கலாம்.

சென்ற மகா யுத்தத்தின் முக்கியமான கட்டத்தில் ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்டதால் தான் இதர முதலாளித்துவ நாடுகள் தலையிட முடியாமல் போய்விட்டது. புரட்சிக்காரர்கள் வெற்றியடைந்தனர். உலகத்தின் பெரும் பகுதி நாடுகள் யுத்தத்தி லீடுபட்டிருக்கும் சந்தர்ப்பம் தான் ஒரு தேசம் சுதந்திர மடைவதற்கு தக்க சமயம் என ருஷ்யா நிரூபித்துக் காட்டிவிட்டது. கால மறிந்து புரட்சியை வெற்றிகரமாக நடத்தி புதிய ருஷ்யாவை நிர்மாணித்த வீரர்களுக்கு நமது வாழ்த்து உரித்தாகுக!

ருஷ்யாவில் பல்வேறு பட்ட மதத்தினரும், நாகரிகத்தினரும், பாஷையினரும் பொருளாதார அஸ்திவாரத்தில் அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பின் கீழ் நடைபெறும் ஆட்சியில் ஒன்றுபட்டு தேசத்திற்கு எற்பட்டிருக்கும் ஆபத்தான நிலைமையைத் தைரியத்துடன் சமாளிக்கிறார்கள்.

இந்தியாவில் இன்று இருக்கும் மதங்கள் பல.

அதில் ஹிந்து, முஸ்லீம் ஆகிய இரு மதங்கள் தான் முக்கியமானவை. முஸ்லீம்கள் மைனரிட்டிகள். கிருஸ்தவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள் இதர மைனரிட்டிகள். சில்லறை வித்தியாசங்களைத் தவிர பொதுவாக நாகரிகத்தில் எல்லோரும் ஒரே நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

முஸ்லீம்கள் வேறு நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சிலர் சொல்லிக் கொள்ளுகிருர்கள். அந்த நாகரிகம் காக்கப்படுவதற்கு தனியாட்சி தான் வேண்டுமெனவும் விதண்டாவாதம் செய்கிருர்கள். முஸ்லீம்கள் நாகரிகம் 'இன்னதுதான்' என்று வரை யறுத் திருக்கிருர்களா? இல்லை.

முஸ்லீம்கள் உலகத்தின் எல்லா பாகங்களிலும் இருக்கிருர்கள். அந்த அந்த தேசத்தின் நாகரிகத்தோடு இணைந்ததுதான் முஸ்லீம்களின் நாகரிகம். 'முஸ்லீம் நாகரிகம்' என்று தனியாக ஒன்று இருக்கமுடியாது. கலை தனியாக இருக்கமுடியுமே அல்லாது நாகரிகம் ஒன்றுதான்.

அரேபிய நாகரிகம்தான் முஸ்லீம்களின் நாகரிகமென்ருவது சொல்லமுடியுமா? அரேபியாவிற்கும் முஸ்லீம்களுக்கும் என்ன சம்பந்தம்? இஸ்லாத்தின் தீர்க்கதரிசி அந்நாட்டில் பிறந்தார், வாழ்ந்தார். அதனுல் அத்தேச நாகரிகம் உலகமெங்கும் வியாபித்துள்ள மதத்தின் நாகரிக மாகி விடாது.

மதம், கலை, நாகரிகம் இவைகள் அழிந்து விடுமென அடிக்கடி கூச்சல் கிளம்புகின்றது. இந்தி

யாவில் இது சர்வ சாதாரண மாகிவிட்டது. அர்த்தமில்லாமலும் போய்விட்டது. மதம் காக்கப்பட வேண்டுமானல் மாகிஞட் அரண் தேவை யில்லே. மதக் கட்டளேகளே அனுஷ்டித்தால் தான் மதம் உயிரோடு இருப்பதாக அர்த்தம். நாஸ்திக ஆட்சியாக இருந்தாலும் மதக் கோட் பாடுகளே அனுஷ்டிப்பவர்கள் இருக்கும் வரை மதம் அழிந்து விடாது. மதங்கள் அழியாம லிருக்க துப்பாக்கியோ, கத்தியோ, தடியோ, சண்டையோ ஒன்றும் தேவை யில்லே. இன்று மதத்தின் பெயரால் நடை பெறும் அவ்வளவு குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும் அரசியல் சூழ்ச்சிகள். மதத்தின் பெயரால் இந்தியாவில் தான் குழப்பங்கள் நடப்பதாக எண்ணிவிட வேண்டாம். ஐரோப்பாவின் சரித்திர ஏடுகளேப் புரட்டிப் பார்த்தால் அங்கு நடந்த அக்கிரமத்தில் கோடியில் ஒரு மடங்கு கூட இந்தியாவில் நடக்க வில்லே. இந்தப் பிரச்னேயை ஆளும் வர்க்கத்தினர்கள் பிரமாதப்படுத்தி உலகத்திற்கு நாடகமாடிக் காட்டுகிருர்கள்.

பல மதங்கள், பல நாகரிகங்கள், பல கலாசாரங்கள் பல பாஷைகள் இருந்த ருஷ்யாவில் இன்று உலகம் போற்றும்படியாக ஆட்சி நடை பெற வில்லேயா? அங்கும் முஸ்லீம்கள் இருக்கிருர்கள். அவர்கள் மைஞரிட்டிகள் தான். இருந்தால் என்ன? மக்கள் ஆட்சி நடக்கிறது. இந்தியாவிலோ! பிரிட்டிஷ் ஆட்சி! மைஞரிட்டிப் பிரச்னேயை பனிக்கு ஒப்பிடலாம். பொருளாதார சமத்துவங் கொண்ட சுதந்திர ஆட்சி என்ற

சூரியன் உதயமானால், பனி தானாக இருக்குமிடந் தெரியாமல் மறைந்து விடும்.

சில மாதங்களுக்கு முன் சர்வதேச ஸ்தாபனமாகிய கோமின்டர்னை அதன் தலைவர் ஸ்டாலினே கலைத்து விட்டார். அதைப் பற்றி இரு வித அபிப்பிராயங்கள் இன்றும் இருக்கின்றன. அது சரியா, தவறு என்ற ஆராய்ச்சியில் புகவேண்டியதில்லை. ஸ்டாலின் செய்தது அத் தேசத்தின் நன்மையை உத்தேசித்து. யுத்தத்தில் ருஷ்யாவின் நண்பர்களாக இருக்கும் அமெரிக்காவும் பிரிட்டனும் அதன் தத்துவத்தைக் கண்டு பயப்படுகின்றனர். ருஷ்யாவிற்கு அவ் விரு தேசங்களின் உதவி மிக மிக இன்றியமையாததாகிவிட்டது. அவற்றின் உதவியைப் பெறுவதற்கு கோமின்டர்னை கலைப்பதில் தவறில்லையென ஸ்டாலின் முடிவு செய்திருக்க வேண்டும். சர்வதேசீயக் கண்ணோட்டத்தை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பது என்ற கொள்கையைக் கைக்கொண்டால் அமெரிக்க, பிரிட்டிஷ் உதவி வேண்டிய அளவு பெற முடியாதென நன்கு தெரிந்து கொண்ட பின்னரே கோமின்டர்னை கலைத்திருக்க வேண்டும். தன் தேசத்தின் சுதந்திரம் தான் முதலில், பின்னர் தான் சர்வதேசக் கண்ணோட்டம் என்பதை ஸ்டாலினின் நடவடிக்கைகள் தெளிவாக்குகின்றன. அதில் உண்மை பொதிந்து கிடக்கிறது. இந்தியனே! அந்த ருஷ்யாவைப் பார்!

இந்தியாவும்—அமெரிக்காவும்

அமெரிக்காவை உலகத்தில் பெரிய பணக்கார தேசமென்று சொல்லுகிறார்கள். அமெரிக்கா என்று தற்காலத்தில் சொன்னால் ஐக்கிய அமெரிக்காவை (U.S.A.) த்தான் குறிக்கும். சென்ற மகா யுத்தத்திலும் இந்த மகா யுத்தத்திலும் அமெரிக்காவின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். யுத்த களங்களில் நேரடியாகப் போர் புரிந்ததைப் பற்றி இங்கு குறிப்பிட வில்லை. ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்க தளவாடங்கள் பேருதவி புரிகின்றன. சென்ற மகா யுத்தத்திலும் இதே நிலை தான்.

யுத்தத்தில் பிரதான ஸ்தானம் வகிப்பது ஒரு தேசத்தின் வீரத்தையோ அல்லது பணப் பலத்தையோ கொண்டில்லை யென்பதை பிரிட்டன் நிரூபிக்கிறது. இன்றைய யுத்தத்தில் பிரிட்டன் தான் பிரதான ஸ்தானம் வகிக்கிற தென்றால் அதை சிலர் ஒத்துக் கொள்வ தில்லை. அந்த ஸ்தானம் ருஷ்யாவிற்குத் தான் என்கிறார்கள். தியாகத்திற்கு முதல் ஸ்தானம் கொடுப்பதென்றால் அது ருஷ்யாவிற்குத் தான் கொடுக்கப் பட வேண்டும். அமெரிக்காவின் உதவி யில்லை யென்றால் இது வரை பிரிட்டனின் கதி என்னவாகி இருக்குமென்பது தெரியுமா என்கிறார்கள் சிலர். அதுவும் வாஸ்தவம் தான். உதவி செய்த நாடுகளில் பிரதான ஸ்தானம் அடைவதற்கு தகுதியுள்ள நாடு அமெரிக்கா தான்.

சர்ச்சில் பிரதம மந்திரியாக வந்த பின்னர் அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியது. அதற்கு சர்ச்சில் செய்த பிரயத்தனம் மகத்தானது. யுத்தத்திலிறங்கு முன் அமெரிக்கா இரவல் தளவாட மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்கி அதன்படி ஆயுதங்களைக் கொடுத்தது. அப்புதிய சட்டம் செய்ய வேண்டிய அவசியம் என்ன ?

சென்ற மகா யுத்தத்தின் போது பிரிட்டன் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை. கடனைத் திருப்பிக் கொடுக்காதவர்களுக்கு மறுபடியும் கடன் கொடுக்கக் கூடாதென ஒரு சட்டத்தை அமெரிக்கா இயற்றி இருந்தது. யுத்தம் ஆரம்பமானவுடன் அமெரிக்காவிலிருந்து உதவியை அடைய சட்டப்படி லாயக்கற்றதாகப் போய்விட்டது பிரிட்டன். அதற்காகத் தான் இரவல் தளவாட மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்க வேண்டியிருந்தது. வாங்கிக் கொள்ளும் ஆயுதங்களைத் திருப்பிக் கொடுத்து விடுவது என்ற தத்துவத்தைக் கொண்டது தான் அந்த சட்டம்.

ருஷ்யாவிற்கும் அமெரிக்க தளவாடங்கள் கொடுக்கப் படுவதாகச் சொல்லப் படுகிறது. இவ்வளவு உதவியை செய்யும் அமெரிக்கா இந்த யுத்தத்தில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறதென்றால் மிகையாகாது.

உலக சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால் சுமார் 500 வருஷங்களாக பிரிட்டன் பிரதான ஸ்தானம் வகித்து வருவது நன்கு புலப்படும். இந்தியா, சைனா, ருஷ்யா இவற்றைப் போன்று விஸ்

தீரணத்தில் பெரிய தேசமா? அல்லது இதர தேசங்களை விட செழிப்பான தேசமா? இல்லை. அதன் ராஜ தந்திரமே அந்த ஸ்தானத்திற்கு பிரிட்டனைக் கொண்டுவந்த தெனலாம். ராஜ்ய பாரம் நடத்த வீரத்தைக் காட்டிலும் தந்திரம் தான் முக்கிய மென உலகத்திற்கு முதல் முதல் எடுத்துக் காட்டியது பிரிட்டன் தான். இந்திய சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் பிரிட்டிஷா ரின் ராஜ தந்திரம் வெண்மையான துணியில் பட்ட மசிக் கறையைப் போன்று காட்சி யளிக் கிறது. இந்த யுத்தம் ஆரம்ப மானதிலிருந்து இன்று வரையி லுள்ள சம்பவங்களில் டங்கர்க் போன்ற சில சம்பவங்கள் பிரிட்டனின் ராஜ தந் திரத்தை நன்ருக எடுத்துக் காட்டுகின்றன. யுத்த ஆரம்ப காலத்தில் அமெரிக்காவில் தனக்கு எதி ராக இருந்த பெரும்பான்மை அபிப்பிராயத்தை மாற்றியதில் பிரிட்டன் ராஜ தந்திரத்தின் சிக ரத்தை அடைந்து விட்டதென்றே சொல்ல வேண்டும். உலகத்தின் பெரிய ராஜ தந்திரியான பிரிட்டனின் ஆட்சியில் தான் இந்தியா இன்று சிக்குண்டு கிடக்கிறது. இந் நிலைமையை இந்தியா விரும்ப வில்லை. இந்தியர்கள் அமெரிக்காவைப் பின்பற்றினுல் இன்றைய பிரச்னை தீர்ந்துவிடும். எந்த அமெரிக்காவை?

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ் ஸ்பெயின் அரசாங்கத்தின் உதவியால் கண்டு பிடித்தான் என்பது எல்லோரும் அறிந்த சரித் திரம். முதன் முதலாக அமெரிக்காவில் குடியேறி

ஆதிக்கம் வகித்தவர்கள் ஸ்பானியர்டுகள் தான். அது 15, 16-வது நூற்றுண்டு.

ஐரோப்பியர்களின் குடியேற்றத்திற்கு முன்பு அமெரிக்காவில் பூர்வீகக் குடிகள் இருந்தனர். அவர்களுக்கு சிகப்பு இந்தியர்கள் என்ற பெயரை வழங்கினுர்கள். இந்தியர் என்ற பெயரை வழங்குவதற்குக் காரணம் என்ன? கொலம்பஸ் கடல் பிரயாணத்தை ஆரம்பித்த போது அமெரிக்காவைத் தான் கண்டுபிடிக்கப் போவதாக நினைக்கவில்லை. இந்தியாவிற்கு வேறு வழி ஒன்று கண்டு பிடிக்க வேண்டு மென்பது அவருடைய ஆசை. அக்காலத்தில் இந்தியாவிற்கு கடல் மார்க்கம் ஆப்ரிக்காவைச் சுற்றிக் கொண்டு போவது தான். உலகம் உருண்டையாக இருக்கிற தென்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கு முகமாகச் சென்று இந்தியாவிற்கு வழி கண்டு பிடிக்கும் முயற்சியி லீடுபட்ட கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்.

இந்தியாவிற்கு வழி கண்டு பிடிப்பதில் ஐரோப்பிய நாடுகள் ஏன் அவ்வளவு அக்கரைக் காட்டின! கங்கை நதிப் புரத்துக் கோதுமையும், கன்னடத்துத் தங்கமும், சேரத்துத் தந்தமும் அவர்களை மோகித் திருக்கவேண்டும். இந்தியாவின் டாக்கா மஸ்லின், ஏலம், கிராம்பு, மிளகு முதலிய வாசனை சாமான்களும் ஐரோப்பிய நாடுகளை காந்தத்தைப் போன்று இழுத்து விட்டதென்றுல் தற்புகழ்ச்சி யாகாது.

இந்தியாவி லுள்ளவர்கள் ஐரோப்பியர்களைப்

போன்று வெள்ளை நிறமுடையவர்கள் அல்ல. அமெரிக்காவிலுள்ளவர்களும் அந்நிறத்தையுடையவர்களல்ல. அவர்களை சிகப்பு இந்தியர்கள் என ஏன் அழைத்தனர் என்பதற்குச் சரியான காரணம் தெரியவில்லை.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன் உலகத்தின் எந்த பாகத்திற்கும் அத்துடன் தொடர்பு இருந்ததில்லையென சரித்திரம் கூறுகிறது. கி. மு. 300—200 ஆண்டுகளில் தென் அமெரிக்காவின் சில பாகங்களில் நல்ல நாகரிகமுடைய மக்களும், கட்டுப்பாடுள்ள ஸ்தாபனங்களும் இருந்திருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அந்த காலம் இந்தியாவில் மிக நாகரிகம் வாய்ந்த அசோகரின்-ஆட்சிகாலம். அசோகரின் ஆட்சியின் போது இந்தியாவின் கப்பல்கள் உலகத்தின் பல பாகங்களுக்குச் சென்று வியாபாரம் செய்திருக்கின்றன. ஒருக்கால் இந்தியாவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் தொடர்பு இருந்திருக்கலாமோ என்று ஊகிக்கவும் இட மேற்படுகிறது. ஆனால் அதைப் பற்றி குறிப்பான ஆதாரங்கள் ஏதும் இல்லை.

அமெரிக்காவில் தங்கம் ஏராளமாகக் கிடைத்தது. ஐரோப்பிய தேசங்கள் குடியேறுவதில் போட்டி போட்டன. அட்லாண்டிக் சமுத்திரத்தில் பல சிறு சண்டைகள் ஆங்கிலேயர்களுக்கும் ஸ்பானியர்டுகளுக்கும் நடந்திருக்கின்றன. ஸர், பிரான்ஸிஸ் டிரேக் கோஷ்டியினர் ஸ்பெயின் தேசத்தவர் கொண்டுவரும் தங்கக் கப்பல்களை

அடிக்கடி வழி மறித்துக் கொள்ளை யடித்தது மிகப் பிரசித்தமானது. அது மட்டுமா? அமெரிக்காவில் ஸ்பெயினுக்குச் சொந்தமான இடங்களில் சென்று ஏராளமான தங்கத்தை கொள்ளையடித்து இங்கிலாந்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்த "உயர்ந்த தொழிலுக்கு" அப்போதைய ஆங்கில ஆட்சி ஆதரவு காட்டி வந்தது என்பது மிகவும் முக்கியமானது.

அத்தொழிலில் ஈடு பட்டிருந்த மாலுமிகளில் முக்கியஸ்தர்கள் மூவர். பிரான்ஸிஸ் டிரேக், ஜான் ஹாக்கின்ஸ், வால்டர் ராலி. இவர்கள் கியாதி வாய்ந்த மாலுமிகள் என்று இன்றும் அவர்களை இங்கிலாந்தில் கொண்டாடுகிறார்கள். அவர்கள் செய்தது வீரச் செயல்கள் என்று பிரிட்டிஷ் சரித்திரம் கூறுகிறது. டிரேக், ராலி இவர்களுக்கு எலிஸபெத் ராணி ஸர் பட்டங்கள் கொடுத்து கௌரவப் படுத்தினர்.

உலகத்தில் மிக நாகரிகம் வாய்ந்த தேசங்களில் அமெரிக்காவும் ஒன்று. அந்த அமெரிக்காவில் இன்றும் நீக்ரோக்கள் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. நீக்ரோக்கள் அமெரிக்காவில் எப்படி குடியேற்றப் பட்டார்கள் என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். அமெரிக்க குடியேற்ற நாடுகளில் சுரங்க வேலைகளுக்கும், விவசாயத்திற்கும் கூலியாட்கள் கிடைக்க வில்லை. அமெரிக்காவிற்குச் சென்று கொள்ளை யடித்துக் கொண்டிருந்த ஆங்கில மாலுமிகள், இந்த ரகசியத்தை உணர்ந்து ஆப்ரிக்காவிலிருந்து நீக்ரோக்

களைக் கொண்டு போய் அமெரிக்காவில் விற்று கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள். மனிதனை மனிதன் விற்கும் வியாபாரத்தை கண்டம் விட்டு கண்டம் ஆரம்பித்து நடத்தியவர்கள் தங்களை மிக நாகரீகம் வாய்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆங்கிலேயர்கள் தான். அவ்வியாபா ரத்தில் முதல் முதலில் ஈடுபட்ட பெருமை ஜான் ஹாக்கின் ஸுக்குத்தான் உண்டு.

17-வது நூற்றுண்டில் தான் அமெரிக்காவில் முதல் குடியேற்ற நாடு ஆங்கிலேயர்கள் சார்பில் ஆரம்பிக்கப் பட்டது. அதற்கு வர்ஜீனியா என்று பெயரிடப்பட்டது. இந்த நூற்றுண்டில் தான் பிரிட்டன் உலக சரித்திரத்தின் முதன்மை ஸ்தா னத்தை நோக்கித் தீவிரமாகச் செல்ல ஆரம்பித் தது.

18-வது நூற்றுண்டு உலக சரித்திரத்தில் முக் கியமான பாகம். நான்கு சுதந்திரங்களைப் பற்றி உலகத்திற்கு உபதேசம் செய்யும் ரூஸ்வெல்ட் தலைவராக இருக்கும் அமெரிக்கா சுதந்திர மடைந்த நூற்றுண்டு. தாய், தந்தை, சகோதரன், பெண்ஜாதி, பிள்ளைகள் இவர்களைவிட சுதந்திரம் பெரிதென நிரூபித்தனர் அமெரிக்கர்கள்.

ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுக்கல் ஜெர் மனி, ஹாலந்து, பிரிட்டன் முதலிய தேச மக்கள் அமெரிக்கா கண்டத்தின் பல பாகங்களிலும் போய் குடியேறி இருந்தனர். இந்த நூற்றுண் டின் பிற் பகுதியில் ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ் சுக்காரர்களுக்கும் உலகத்தின் பல பாகங்களிலும்

சண்டை நடந்து கொண்டிருந்தது. அமெரிக்காவில் நடந்த சண்டையில் குடியேற்ற நாடுகளும் பிரிட்டனுக்கு உதவின. பிரஞ்சுக்காரர்கள் தோல்வி யடைந்தனர். அதன் பலனாகத்தான் கானடா பிரிட்டனுக்குக் கிடைத்தது. அமெரிக்காவில் அதற்குப் பின் பிரஞ்சுக்காரர்களுக்கு குடியேற்ற நாடே இல்லாமல் போய் விட்டது. இந்தியாவிலும் பிரிட்டிஷாருக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கும் பலமான சண்டை நடந்து கொண்டிருந்தது.

பிரிட்டனுக்கு ஏகாதிபத்திய ஆசையும் பணத் தேவையும் அதிகரித்தது. அமெரிக்க நாடுகளிட மிருந்து பணத்தை உறிஞ்ச ஒரு சூழ்ச்சி செய்தது. அமெரிக்க குடியேற்ற நாடுகளின் நன்மைக்காகச் செய்த சண்டையின் செலவை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதும் அதன் எண்ணம். குடியேற்ற நாடுகளில் முத்திரைக் காகிதச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. குடியேற்ற நாடுகள் இதற்கு விரோதமாக ஆர்ப்பாட்டங்கள் செய்தன. "பிரதி நிதித்துவம் இல்லாமல் வரியில்லை." என்ற கோஷம் கிளப்பப்பட்டது. ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பிரிட்டன் பயந்து அச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டது.

பின்னர் அயல் நாடுகளிலிருந்து வரும் தேயிலை முதலிய சாமான்களுக்கு வரி விதித்தனர். "அந்நியத் தேயிலை பகிஷ்கார இயக்கம்" ஆரம்பமாயிற்று. பிரிட்டனின் போக்கைக் கண்டு குடியேற்ற நாட்டினர் வெறுப் படைந்தனர். போஸ்

டன் துரை முகத்தில் தேயிலைக் கப்பல் ஒன்று வந்திருந்தது. அந்நகரத்து மக்கள் திரண்டுபோய் அக்கப்பலுக்குள் புகுந்து தேயிலைப் பெட்டிகளை வாரி கடலில் போட்டுவிட்டுத் திரும்பி விட்டனர். அச்சம்பவத்திற்குத் தான் "போஸ்டன் தேக்கச் சேரி" என்று சரித்தி ராசிரியர்கள் அழைக்கிறார் கள்.

அந்நகர வாசிகளின் செயலைக் கண்டித்து பிரிட்டன் கூட்டபராதத்தை விதித்தது. கூட்டு அபராதம் நமக்குப் புதிதல்ல. 1942 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின் இந்தியா முழுவதும் அதை ருசி பார்த்த தல்லவா!

"அமெரிக்க சுதந்திரப் போர்" மூளுவதற்கு மேற் கூறிய காரணங்கள் முக்கியமானவை.

இன்று இந்தியா சுயராஜ்ய மடையவில்லை. இருந்தாலும் இந்திய சட்டசபை யென்று இருக் கிறது. அச்சபையில் ஜனங்களில் ஒரு சாராரின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். வைஸ்ராயால் நிய மிக்கப்பட்ட நியமன அங்கத்தினர்களும் இருக் கிறார்கள். சர்க்காரின் கட்சிக்கு ஓட்டுச் செய் வதற் கென்றே நியமிக்கப்பட்டவர்கள். அப்படி யிருந்தும் எத்தனையோ தடவைகளில் சர்க்காரால் கொண்டுவரப் பட்ட புதிய வரி விதிப்பு மசோ தாக்கள் தோற்கடிக்கப் பட்டிருக்கின் றன. ஆனால் வைஸ்ராயின் விசேஷாதிகாரம் சட்டசபையின் முடிவை மாற்றி தோற்கடிக்கப் பட்ட மசோதாக் கள் சட்டமாக்கப் பட்டிருப்பதைக் கணக் கெடுத் தால் ஒரு தனி சரித்திரமே எழுதலாம்.

"பிரதிநிதித்துவ மில்லாமல் வரியில்லை" என்ற கோஷத்தை இரு நூற்றுண்டுகளுக்கு முன்னே கோஷித்து அமெரிக்கா உலகுக்கு வழி காட்டியிருக்கிறது. இந்தியா ஏன் அவ்வழியைப் பின் பற்றவில்லை?

1935-வது வருஷ சட்டத்தின் கீழ் மாகாண சுயாட்சி என்ற பெயரால் இந்தியாவில் ஆட்சி ஆரம்பமாயிற்று. தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஜனங்களின் பிரதிநிதிகளால் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. அந்த சட்டத்திற் குட்பட்டு மாகாணங்களில் ஆட்சி நடந்தது. 1939வது வருஷம் செப்டம்பர் 3ந் தேதி, இன்று நடைபெறும் மகாயுத்தம் ஆரம்ப மாயிற்று. இந்தியாவும் யுத்தத்தில் ஈடுபட்டு விட்டதாக இந்தியாவைக் கலக்காமலே பிரகடனப் படுத்தப் பட்டது. மாகாண மந்திரிகள் ராஜீனுமா செய்தனர். கவர்னரின் எதேச்சாதிகார ஆட்சி ஆரம்ப மாயிற்று. ஜனங்களின் பிரதிநிதிகள் யுத்த எதிர்ப்பு கோஷங்கள் செய்து சத்தியாக்கிரகம் செய்தனர். அவர்களை கவர்னரின் ஆட்சி சிறைக் கனுப்பியது. உலக சுதந்திரத்தைக் காப்பாற்றப் புறப்பட்டதாகப் பறை சாற்றும் வல்லரசு இந்தியாவில் கையாளும் முறையைப் பார்த்தீர்களா! ஆளப்படுவோன் ஆள்பவனை அகற்றினுலல்லாது, ஆள்பவன் தானுக அகன்று விடுவான் என நினைப்பது பேதமை. அதை அறிந்தே அன்று அமெரிக்கர்கள் உலகத்திற்கு வழி காட்டினர்.

1775-ஆம் வருஷம் "அமெரிக்க சுதந்திரப்

போர்” ஆரம்பமாயிற்று. ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்க சேனைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவ்வருஷம் முழுவதும் சாதாரணமாகவே சண்டை நடந்து கொண்டிருந்தது. 1776-வருஷம் அமெரிக்கா குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி சுதந்திரப் பிரகடனத்தை தயார் செய்து வெளியிட்டார்கள்.

1776-ஆம் வருஷம் ஜுலை மாதம் 4ம் தேதி அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப் பட்ட சுதந்திரப் பிரகடனத்தின் சாரம் :—

“உலகில் மனிதர்கள் உயர்வு தாழ்வின்றியே சிருஷ்டிக்கப்பட்டார்கள். சுதந்திரம், செவ்வையான வாழ்க்கை இவைகள் மனிதனின் பிறப்புரிமைகள். இவ்வித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத்தான் அரசாங்கம் ஏற்படுகிறது. அரசாங்கம் ஆளப்படுவோரின் சம்மதத்துடனேயே நடைபெறவேண்டும்.

எந்த அரசாங்கமாவது மேற்கூறிய லட்சியங்களுக்குப் பங்கம் விளைவிக்கு மானல் அந்த அரசாங்கத்தைத் திருத்தி யமைக்கவோ அல்லது அகற்றவோ ஜனங்களுக்கு உரிமையுண்டு. அது ஜனங்களின் தவிர்க்கமுடியாத கடமையாகும்.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் நடைபெறும் பிரிட்டிஷ் ஆட்சி கொடுங்கோன்மை வாய்ந்ததாக இருக்கிறது. இப்பொழுதிருக்கும் பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சி திரும்பத் திரும்ப துன்பங்களை விளைவித்து அமைதியைக் குலைக்கக் கூடியதாக இருக்கிறது. நாம் பன்முறை இம்மா

திரி செய்ய வேண்டாமென மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொண்டிருக்கிறோம். திரும்பத் திரும்பச் செய்து கொண்ட நமது விண்ணப்பங்கள் துன்பங்களாக மாறினவே யொழிய அவர்களின் கவனத்தைக் கவரவில்லை. தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் கொடுங்கோன்மையைக் காட்டிக் கொள்ளும் அந்த மன்னர் சுதந்திரமக்களை ஆட்சி புரிய அருகதை யற்றவரே.

ஆங்கிலேய சகோதரர்கள் நம்மைப் பாது காக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளவும் இல்லை; அவர்களின் பாதுகாப்பு நமக்குத் தேவையு மில்லை. வேண்டாத சட்டங்களை நம் மீது பிரயோகிப்பது கூடாதென பன்முறை எச்சரித்திருக்கிறோம். நமது பூர்வீகத்தைப் பற்றியும், நாமிருக்கும் நிலைமையைப் பற்றியும், நமது சுற்றுப் புற அசௌகரியங்களைப் பற்றியும் எத்தனையோ தடவைகளில் ஞாபக மூட்டியிருக்கிறோம். நாமிருவரும் (பிரிட்டிஷ்—அமெரிக்க) ஒரே இனத்தவர் என்பதை தெரிவித்திருக்கிறோம். நியாயத்திற்கு அவர்கள் செவி சாய்க்கவில்லை. இவ்வளவையும் உதறித்தள்ளி விட்டார்கள்.

ஆகவே அவர்களின் சம்பந்தத்தை அறுத்துத் தள்ளி, சண்டை காலத்தில் எதிரிகளாகவும், சமாதான காலத்தில் நேயர்களாகவும் பாவிக்க வேண்டிய நிர்பந்தத்தை யுண்டாக்கி இருக்கிறார்கள்.

ஆகையால் அமெரிக்க காங்கிரஸ் அங்கத்

தினர்களாகிய நாம் குடியேற்ற நாடுகளின் உத்தம மக்களின் சம்மதத்தின் பேரில், உலகத்திற்கு நீதி வழங்கக் கூடிய ஒரே நீதிபதியான எல்லாம் வல்ல இறைவன் முன்னிலையில் இந்த சுதந்திரப் பிரகடனத்தைச் செய்கின்றோம்."

பிரகடனம்

"இன்று முதல் ஐக்கியச் சிறு நாடுகள் சுதந்திர மடைந்துவிட்டன. பிரிட்டிஷ் முடியரசின் தொடர்பு அகற்றப் பட்டு விட்டது. இவ் விரு தேசங்களிடையே ஒருவித அரசியல் சம்பந்தமும் கிடையாது. பூர்ண சுதந்திர மடைந்த நாடுகள் என்ற ஹோதாவில் ஐக்கியச் சிறு நாடுகள் யுத்தப் பிரகடனம் செய்யவும், சமாதானம் நிலவச் செய்யவும் உடன் படிக்கைகள் செய்து கொள்ளவும், வியாபாரத்தை ஸ்தாபிக்கவும் சுதந்திர நாட்டினர் செய்யும் எந்த காரியத்தையும் செய்ய பரிபூர்ண உரிமை யுண்டு.

நாம் உறுதியுடன் செய்த தெய்வீகத் தன்மையால் காக்கப்படும் இப்பிரகடனத்தை நிறைவேற்றுவதற்கு நம்முடைய உடல், பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்யத் தயாராக இருக்கிறோம்."

காங்கிரஸின் சார்பாக ஜான் ஹேன்காக் (தலைவர்) கையொப்ப மிட்டார்.

13 குடியேற்ற நாடுகள் தான் முதலில் ஐக்கியப் பட்டன. இன்று 48 நாடுகளைக் கொண்டி ருக்கிறது ஐக்கியம். அமெரிக்கா

சுதந்திர தேசமென உலகத்திற்குப் பறை சாற்றப் பட்டது. 1777-ஆம் வருஷம் விசேஷ வெற்றி தோல்விகள் ஒன்றும் இல்லை.

1778-ஆம் வருஷம் அமெரிக்காவுக்கு சார டோக என்னு மிடத்தில் மகத்தான வெற்றி கிடைத்தது. இங்கிலாந்தின் ஆதிக்கம் எங்கும் பெருகி வந்ததைக் கண்டு பொருமை கொண் டிருந்த பிரான்ஸ் யுத்தத்தில் கலக்க ஆரம்பித் தது. அதைப் பின்பற்றி ஸ்பெயினும், ஹாலந் தும் யுத்தத்தில் கலந்தன. அமெரிக்காவுக்கு அந்த மூன்று நாடுகளின் உதவியும் மிக மிக இன்றிய மையாததாக இருந்தது. அக்காலத்தில் இங்கி லாந்தில் யுத்த தளவாடங்கள் உற்பத்தி யான தைப்போல் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப் படவில்லை. ஆகையால் அந்நிய தேசங்களான பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து இவைகளின் உத வியை, தங்கள் தாய் நாடான பிரிட்டனைத் தோற் கடிப்பதற்கு ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை.

இதைக் கண்ட ஆங்கில ராஜ தந்திரிகள் தங் கள் சொந்த விவகாரங்களில் ஐரோப்பிய தேசங் கள் தலையிடுவதாக மதித்தனர். தலையிடும் ஐரோப் பிய தேசங்களின் மீது சீறி விழுந்தனர். அமெரிக் காவோடு சண்டையிடுவதோ டல்லாமல் ஐரோப் பிய தேசங்களுடனும் போரில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரிட்டனுக்கு ஏற்பட்டு விட்டது. அதே சமயத்தில் இந்தியாவிலும் பிரஞ்சுக்காரர் களோடு போர் நடந்து கொண்டிருந்தது. அஷ் டாவதானத்தைப் போல் ஐரோப்பா, ஆசியா,

அமெரிக்கா இந்த மூன்று கண்டங்களிலும் தன் கவனத்தைச் செலுத்த முடியவில்லை. ஆகையால் பிரிட்டன் அமெரிக்கப் போரில் தோல்வியடைந்தது. 1783-ஆம் வருஷம் முதல் அமெரிக்கா சுதந்திர தேசம்.

இந்தியாவில் அதிக கவனத்தைச் செலுத்துவது தான் அமெரிக்காவில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் பலனுள்ளதாக இருக்கும் என பிரிட்டன் முடிவு செய்திருக்க வேண்டும். ஏன்? கிழக்கு இந்தியக் கம்பெனியார் சத விகிதம் போட்டுச் சொல்ல முடியாத அளவில் இந்தியாவில் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தியாவில் எங்கு பார்த்தாலும் சண்டை மயமாக இருந்தது. பிரிட்டிஷார் தங்கள் பேர் போன ஆயுதமான ராஜ தந்திரத்தை இந்திய உள் நாட்டு விவகாரங்களில் எடுத்து வீச ஆரம்பித்தனர். துப்பாக்கி, பீரங்கி, வாள், வேல் முதலிய ஆயுதங்கள் பிரிட்டிஷ் ராஜதந்திர ஆயுதத்திற்கு முன் பலனற்றுப் போயின. பிரஞ்சுக்காரர்களின் வீரம் பிரிட்டிஷ் ராஜ தந்திரத்திற்கு முன் தலை காட்ட முடியவில்லை.

இந்தியா அச் சந்தர்ப்பத்தில் திறந்த வீட்டைப் போல் இருந்தது. யார் எங்கு போனாலும் கேட்பாரில்லை. அந்த நிலைமையைப் பரிசீலனை செய்த பின்னர் தான் அமெரிக்க சுதந்திரப் போரில் ஊக்கங் காட்டுவதை விட இந்திய விவகாரங்களில் அதிக ஊக்கத்தை பிரிட்டன் காட்டி

யது. மேலும் அமெரிக்காவில் சண்டையிட்டவர்கள் தங்கள் தாயாதிகள், அவர்களோடு உறவாடிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அன்றே பிரிட்டனுக்கு இருந்திருக்கிறதென்று தற்பொழுது நன்கு தெளிவாகிறது. அன்று பிரிட்டன் அந்த முடிவை செய்திருக்காவிட்டால், இரண்டாயிரம் மைல் நீளமும் இரண்டாயிரம் மைல், அகலமும் உள்ள இப்பரந்த தேசத்தில் இன்று ஏதேச் சாதிகார ஆட்சியை நடத்திக் கொண்டிருக்க முடியுமா?

பூகோள சாஸ்திரப்படிதான் இந்தியா ஒரே தேசமாகக் காணப்படுகிறதென்றும், பல நாகரிகமுடையவர்கள், பல பாஷைகளைப் பேசுகிறவர்கள், பல கலாசாரங்களை அனுஷ்டிப்பவர்கள், பல மதங்களை மேற்கொண்டவர்கள் இங்கு வசிக்கிறார்கள் என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது. இந்தியாவில் ஒற்றுமையை நிலை நாட்டியவர்கள் பிரிட்டிஷார் தான் என்று பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். அதோடு நின்றுவிடாமல் இக்கருத்துக்களை இந்திய வளரும் சமுதாயத்திற்குப் பள்ளிக்கூட பாட புத்தகங்கள் மூலம் 'இன்ஜெக்ட்' செய்கிறார்கள். இந்திய சுதந்திரத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தவுடன், "இந்தியாவில் ஒற்றுமை இல்லை; அது சுதந்திரமடைய லாயக்கற்றதென்ற" பல்லவியை பாட ஆரம்பித்து விடுகிறார்கள். இது முன்னுக்குப்பின் முரண்பட்டதாக இருக்கிறது.

150 வருஷ காலத்தில் இந்தியா சுதந்திர

மடையத் தக்க நிலைமையை உண்டாக்க முடிய வில்லை யென்றால் அந்த ஆட்சியை இந்தியர்கள் இன்னும் நம்பிக் கொண்டிருப்பது பேதமை யில்லையா? ருஷ்யாவில் புதிய ஆட்சி தோன்றிய வுடன் ஒற்றுமை ஏற்பட்டு முன்னேற்றம் ஏற்பட வில்லையா?

அமெரிக்காவின் நிலைமை யென்ன? இன்று அது முன்னேறி யிருக்கும் அளவு எவ்வளவு? சுருக்கமாக ஆராய்வோம்.

அதன் தொழில் வளர்ச்சியைப் பற்றி சிந்திக்கும் போதே மோட்டார்கள் ஓடுவதும், விமானங்கள் பறப்பதும், பீரங்கிகள் சப்திப்பதும், சப்மரீன்கள் கடலுக்குள் போவதும், டாங்கிகள் காடு மோடுகளில் ஏறுவதும், வெடி குண்டுகள் வெடிப்பதும், துப்பாக்கிகள் சுடுவதும் போன்ற காட்சிகள் நம் கண் முன் நடன மாடுகின்றன. கடைத் தெருவுக்குச் சாமான் வாங்கப் போனால் அமெரிக்கச் சாமான்கள் தான் உயர்ந்தவைகள் என்று சொல்லும் படியான நிலைமை யுண்டாகி விட்டது. இரசாயன ஆராய்ச்சியிலும் விஞ்ஞான ஆராய்ச்சியிலும் அடைந்திருக்கும் முன்னேற்றம் அபாரமானது. சினிமா என்றவுடன் ஹாலிவுட் ஞாபகம் தான் எல்லாருக்கும் வருகிறது. அங்கே டெலிவிஷன் சர்வசாதாரண மாகி விட்டது. இயந்திரங்கள் உற்பத்தியில் உலகத்தில் முதல் ஸ்தானம் அமெரிக்காவுக்குத் தான். ரயில் வசதியைப்பற்றி புத்தகங்களில் எழுதி யிருப்பதைப் பார்த்தால் நம்மைப் பற்றி நாம் நினைக்கவே அவ

மானமாக இருக்கிறது. நாம் இன்றைய நிலையில் ரயிலில் எப்படி பிரயாணம் செய்கிறோம்? குட்ஸ் வண்டியில் மூட்டைகள் அடுக்குவதைப் போன்று என்று உதாரணம் சொல்லலாம். குளிர் காலத்தில் உஷ்ணமாகக் காற்று வரும்படியான ரயில்கள், உஷ்ண காலத்தில் குளிர்ச்சியான காற்று வரும் வசதியுடைய ரயில்கள், பூமிக்குள்ளே ரயில்கள், பூமிக்கு மேலே ஓடக்கூடிய ரயில்கள் எத்தனை விதம்! ஆகாய விமானம் என்றால் நமக்குப் பிரமாதமாக இருக்கிறது. மோட்டார் பஸ்களைப் போல போக்குவரத்துக்கு விமானங்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஒலி பரப்பும் நிலையங்கள் சர்வ சாதாரணம். நியுயார்க் நகரத்தைப் படத்தில் பார்க்கும் போதே நமக்குத் தலை சுற்ற ஆரம்பிக்கிறது. எத்தனை அடுக்குள்ள மெத்தைகள்! மின்சாரலிப்ட்டுகள் இல்லாமல் மேலே போகமுடியாதென சொல்லுகிறார்கள்.

தினம் 4 கோடி பத்திரிகைகள் (பிரதிகள்) வெளியாகின்றன. அங்குள்ள ஜனத்தொகை 12 கோடியாகும். 3 பேருக்கு ஒரு பத்திரிகை விகிதம் சராசரி கணக்காகிறது. 1900 பத்திரிகைகள் இருக்கின்றன. பத்திரிகை சுதந்திரம் என்றால் அது அமெரிக்காவில் தான் இருக்கிறதென்று சொல்லலாம். இத்தனை பத்திரிகைகளையும் வெளியிட்டு, கோடிக் கணக்கான புத்தகங்களையும் வெளியிட்டு இதர தேசப் பத்திரிகைகளுக்கும் காகிதம் அனுப்புகிறார்கள் என்றால் அதன் காகிதத் தொழிலின் முன்னேற்றத்தைப் பாருங்கள்.

உலகத்திலேயே அதிகமான மின்சார சக்தியை உபயோகிக்கிறவர்கள் அமெரிக்கர்கள் தான். அதற்கு அடுத்தபடி தான் ஜெர்மனி, ருஷ்யா, பிரிட்டன் முதலிய நாடுகள். மின்சார வசதியோடு கூடிய சொந்த வீட்டுக்காரர்களின் சதவிகிதம் 65 ஆகும்.

உலகத்தின் அதிகமான இரும்பையும் நிலக்கரியையும் உற்பத்தி செய்து, சாமான்களாக்கி, விற்பனை செய்வதும் அமெரிக்கா தான். புகையிலை விஷயத்திலும் அப்படியே தான். அமெரிக்க பருத்தி உலக உற்பத்தியில் 100-ல் 41 பங்காகும்.

வயது வந்த 100 பேரில் 95 பேர் படித்திருக்கிறார்கள். ரேடியோ ஸெட்டும், டெலிபோனும் இல்லாத வீடே அநேகமாக இல்லை என்று சொல்லி விடலாம். சராசரி குடும்பத்திற்கொரு மோட்டார் இருக்கிறது. அமெரிக்கரின் சராசரி வயது 62.

தொழில் வளர்ச்சியைப் போலவே விவசாயத்திலும் அமெரிக்கா நல்ல வளர்ச்சி யடைந்திருக்கிறது. இவ்வளவு வளர்ச்சிகளும் 1783-ம் வருஷம் சுதந்திர மடைந்ததற்குப் பின்னர் தான்.

இவ்வளவு முன்னேற்றத்தையும் அடைந்த அந்நாடு சுதந்திரப் போரை ஆரம்பித்த காலத்தில் பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து இந்த மூன்று தேசங்களின் உதவியும் இல்லாமல் அப்போரில் வெற்றியைக் காண முடியாத நிலையில் இருந்தது. இன்றைய யுத்தத்திலோ அமெரிக்க தளவாடங்க

ளில்லா திருந்தால் போரின் போக்கே மாறிப் போயிருக்கும்.

இன்றைய இந்திய நிலையைக் காட்டிலும் பன் மடங்கு மோசமா யிருந்த அமெரிக்கா சுதந் திர மடைந்து மேற்கூறிய வகையில் முன்னேறி யிருக்கிறதென்றால் இந்தியா ஏன் அதற்குத் தகுதி யற்றதென்று சொல்ல வேண்டும்?

பெரும்பான்மையான ஐரோப்பிய தேசங் களி லுள்ளவர்களும் அமெரிக்காவில் குடியேறி இருந்தார்கள். ஒரே பொது மொழி யில்லை. சுமார் 15 பாஷைகளை யுடையவர்கள் இருந்தார்கள். தலைவர் தேர்தல் காலங்களில் அத்தனை பாஷை களிலும் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநி யோகம் செய்யவேண்டி யிருந்தது. மிகக் கேவல மான வியாபாரமாகிய மனிதனை மிருகங்களைப் போன்று விற்கும் தொழில் இந்தியாவில் எந்தக் காலத்திலாவது இருந்ததுண்டா! அக்காலத்தில் அமெரிக்காவில் இருந்திருக்கிறது என்று முன் அத்தியாயங்களில் கூறினோம். இன்றைக்கு 150 வருஷங்கள் ஆகின்றன.

அமெரிக்கா சுதந்திரப் போரில் இறங்குவதற் குத் தைரிய மூட்டியது பெரும்பாலும் சட்ட நிபுணர்களின் சேவைதான். அதேமாதிரி இந்தியா விலும் சுதந்திர இயக்கத்தைப் பலப்படுத்தியதும் சட்ட நிபுணர்களின் சேவைதான். அங்கே மத்தி யக் கீழ் வகுப்பு மக்கள் சுதந்திரப்போரின் முன் னணியில் இருந்தார்கள். சுதந்திரப் போரில் வெற்றி கிடைத்தது. இந்தியாவில் சட்ட நிபுணர்

களின் சேவையினல் சுதந்திர இயக்கம் ஓரளவு பலப்பட்டதே தவிர, வெற்றிக்கு வழியைக் காட்ட வில்லை. இந்தியாவின் மத்தியக் கீழ் வகுப்பினர்கள் சுதந்திரப் போரின் தலைமை ஸ்தானத்தைக் கைப்பற்ற வேண்டும். அதற்கு ஏற்ற காலம் இதுதான். இந்நாட்டு மக்கள் அதற்கு முன்வருவார்களா? அவர்களின் தலைமை ஸ்தானம் இந்திய விடுதலைக்கு அழைத்துச் செல்வது நிச்சயம். ருஷ்ய, அமெரிக்க சுதந்திரப் போர்களே அதற்குப் போதிய உதாரணங்களாகும்.

ருஷ்ய, அமெரிக்க நாடுகள் சுதந்திர மடைந்தவுடன் எப்படி முன்னேற்ற மடைந்தனவோ அதே போன்று இந்தியா சுதந்திர மடைந்தால் முன்னேற்ற மடைய எவ்வளவு காலம் பிடிக்கும்? அவ்விரு நாடுகளுக்கு எந்த விதத்திலும் இந்தியா குறைந்த நாடல்ல. இந்தியாவின் நாகரிகம் சரித்திரக் கியாதி வாய்ந்தது. இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பல வருஷங்கள் முன்னல் இந்தியாவில் நடந்த அசோகர், சந்திரகுப்த மௌரியர் இவர்களின் ஆட்சியைப்பற்றி உலக சரித்திராசிரியர்களான பண்டித ஜவாஹர்லால் நேருவும், ஹெச்.ஜி. வெல்ஸும் மிகப் புகழ்ந்திருக்கிறுர்கள்.

இந்தியாவில் கப்பல் வியாபாரம் அசோகர் காலத்திலேயே செழித்திருந்ததற்கு சரித்திர அத்தாட்சிகள் இருக்கின்றன. ஆயிரம் வருஷங்களுக்கு முன் மேற்குக் கடற்கரை யோர நாடுகளில் அராபியர்கள் வந்து குடியேறி வியாபாரம் செய்திருக்கிறுர்கள். அவர்கள் இந்தியக் கப்பல்களையே அதி

கமாக போக்கு வரத்திற்கு உபயோகப் படுத்தி யிருக்கிறார்கள். 200 வருஷங்களுக்கு முன் வரை இந்தியக் கப்பல் வியாபாரம் நன்கு செழித்திருந்திருக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பனி இந்தியாவில் வியாபாரம் செய்துகொண்டிருந்த காலத்தில் அவர்களின் வியாபாரம் பெரும்பாலும் இந்தியக் கப்பல்களில் நடந்திருக்கிறது. இந்தியாவிலிருந்து ஏராளமான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்கப்பல்களிலேயே மேற்கத்திய சாமான்கள் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. அதனால் கிழக்கிந்தியக் கம்பனிக்கு நல்ல லாபம் கிடைத்தது. இந்தியக் கப்பல் தொழிலும் விருத்தி யடைந்தது. இதைக் கண்டு பொறாமை யடைந்த ஆங்கிலேயர்கள் தாங்களும் கப்பல் கம்பனிகளை ஆரம்பித்தனர். கிழக்கிந்திய கம்பனியார்கள் அவர்களுடைய கப்பல்களையே வாடகைக்கு அமர்த்தி ஆதரித்தனர். இந்தியக் கம்பனிகள் நசிக்க ஆரம்பித்தன. அப்போது வெளி வியாபாரம் முழுவதையும் கிழக்கிந்தியக் கம்பனியாரே ஸ்வீகரித்துக் கொண்டதால் இந்தியாவிலிருந்த சிறு வியாபாரிகள் நசித்து விட்டனர். இந்தியக் கப்பல்களுக்கு வேலை யில்லாமல் போய் விட்டது. தொன்று தொட்டு நடந்து வந்த கப்பல் தொழில் அழிந்து விட்டது. கப்பல் தொழிலுக்குள்ள வசதிகள் இந்தியாவில் ஏராளமாக இருக்கின்றன. சுதந்திர இந்தியா அத் தொழிலை உயிர்ப்பிக்கச் செய்யும். அக்காலம் என்று?

இந்தியாவின் புராதீனத் தொழில்களில் நெசவுத் தொழில் ஒன்று. உலகத்தின் பல பாகங்களில் உள்ள மக்கள் தோல்களையும், இலைகளையும், மரப் பட்டைகளையும் உடுத்திக் கொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் நெசவுத் தொழில் இருந்திருக்கிறது. உலகத்தின் பல பாகங்களுக்கு சமீப காலம் வரை இந்தியாவிலிருந்து துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. டாக்கா மஸ்லினைப் பற்றி உலகம் இன்றும் புகழ்ந்து கொண்டிருக்கிறது. பொருட் காட்சி சாலைகளில் உயர்ந்த சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்வை யிடும் நமது கண்கள் இரத்தத்தைக் கக்குகின்றன. அத்திறமையுள்ள நெசவுத் தொழிலாளிகளின் சந்ததியார் இன்று இந்தியத் தெருக்களிலே பிச்சையெடுத்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டவுடன் நமது ஹிருதயம் வெடிக்கிறது. இந்நிலைமை என்று நீங்கும்?

இந்தியாவில் ஜரிகைத் தொழில் சமீப காலம் வரை இருந்திருக்கின்றது. மிக உயர்ந்த ஜரிகை தமிழ் நாட்டில் தயார் செய்யப் பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழ் நாட்டில் இரண்டிடங்களைச் சொல்லலாம். தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம் தாலூக்காவில் அணக்குடி என்று ஒரு கிராமம் உண்டு. அக்கிராமத்தில் இன்று குட்டிச்சுவர்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அங்கே 50 வருஷங்களுக்கு முன்னுல் வரை ஜரிகை உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு குடிசைத்

தொழிலாகவே இருந்திருக்கிறது. அங்கு உற்பத்தி செய்து கொண்டிருந்த குடும்பங்கள் இன்றும் இருக்கின்றன. அதற்கு வேண்டிய ஆயுதங்களும் அக் குடும்பத்தினர்களிடம் இருக்கின்றன. மேல் நாட்டு ஜரிகை இந்தியாவில் புகுத்தப் பட்ட வுடன் இந்திய ஜரிகைத் தொழில் நசித்துப் போயிற்று. மதுரையிலும் ஜரிகை உற்பத்தி சமீப காலம் வரை இருந்திருக்கிறது. ஆனால் இத் தொழில் சூரத் போன்ற இடங்களில் இன்றும் நடக்கிறது. இந்திய ஜரிகைத் தொழிலை இந்திய சர்க்கார் தக்கபடி ஆதரித்தால் அது எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கும். சுதந்திர இந்தியாவே அத்தொழிலுக்கு ஆதரவு காட்டும்! அந் நாள் என்று?

காகிதத் தொழில் சமீப காலத்தில் ஆரம்ப மான ஒரு தொழிலாகும். இந்தியாவிற்கு 1840-ம் வருஷத்திற்கு முன் காகிதம் சீனாவிலிருந்து தான் வந்து கொண்டிருந்தது. இந்தியாவில் காகிதத் திற்கு கிராக்கி அதிகரிக்கவே இந்தியர்களால் பல காகித தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப் பட்டன. தொழிற் சாலைகளென்றால் இன்றிருக்கும்படி யான இயந்திர சாலைகளைப் போன்றவை யல்ல. கையால் காகிதம் செய்யும் தொழிற் சாலைகள். வெகு வேகமாகத் தொழில்கள் வளர்ந்து கொண்டே வந்த காலத்தில் வெடி குண்டைப் போன்று இங்கிலாந்திலிருந்து ஒரு உத்தரவு வீசப் பட்டது. அவ் வுத்தரவு என்ன தெரியுமா?

இந்திய சர்க்காருக்கு வேண்டிய காகிதங்களை

கிரேட் பிரிட்டனிலிருந்து தான் வரவழைத்துக் கொள்ள வேண்டுமென்பது. உத்தரவை விடுத்தவர் இந்தியா காரியதரிசியாக இருந்த ஸர். சார்லஸ் உட். இவர் இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லார்டு இர்வினின் பாட்டனுர். அவருடைய "கைங்கர்யத்தினல்" வளர்ச்சியடைந்து வந்த இந்தியக் காகிதத்தொழில் நசித்து விட்டது. அக்காலத்தில் காகிதத்தை உபயோகப் படுத்துவது என்பது மிகவும் சொற்பம். அரசாங்கத்திற்குத் தான் காகிதம் அதிகமாகத் தேவைப் படும். இக்காலத்தைப்போன்று புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும் கம்பனிகள் உண்டா? அச்சு முன்னேற்றமுள்ள காலமா? இல்லை. ஆகவே காகிதத் தொழில் அழிந்து விட்டது. ஆனல் இன்று இயந்திரத் தொழிற்சாலைகள் இந்தியாவின் பல பாகங்களிலும் ஆரம்பமாகி குழந்தைப் பருவத்திலிருக்கின்றன. ஒவ்வொரு தொழிலும் முன்னேறுவதென்ருல் அதற்கு சர்க்காரின் ஆதரவு வேண்டும். அந்த ஆதரவு தான் கிடையாது. காகிதம் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அந்நிய நாட்டுக் காகிதம் இந்நாட்டில் வராமல் தடுத்தோ, அல்லது அதற்குப் போதிய வரியை விதித்தோ ஆதரவு காட்டியிருந்தால் இந்தியாவில் யுத்தத்தினல் ஏற்பட்டிருக்கும் காகிதப் பஞ்சம் இருந்திருக்காது.

இந்தியாவில் இரும்புத் தொழிலும் பழமையான தொழிலில் ஒன்றுதான். சரித்திரத்திற்

கெட்டாத காலத்திலேயே வாள்கள், வேல்கள் கேடையங்கள் அழகான கத்திகள், க்ஷவரம் செய்யும் கத்திகள், ஊசிகள் இவற்றைத் தயார் செய்து உபயோகப் படுத்தி யிருக்கிருர்கள். அன்று இரும்பிற்கு "டெம்பர்" கொடுத்ததை இன்றும் புகழுகிருர்கள். ஒவ்வொரு ஊரிலும் கொல்லர் உலேகள் உண்டு. ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் அத்தொழில் வளர்ச்சி யடைந்திருந்தது. க்ஷவரக் கத்திகள் ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்யப் பட்டது. க்ஷவரம் செய்யும் போது தூக்கம் வந்து விடும் என்று நமது பேரியோர்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிருே மல்லவா? அந்த உயர்ந்த தொழிலாளிகள் இன்று எங்கே மறைந்திருக்கின்றனர்? சுதந்திர இந்தியா அவர்களேத் தேடிப் பிடிக்கும் காலம் என்று வரும்?

இன்று சர்க்கரைப் பஞ்சம் இத்தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் சர்க்கரைத் தொழில் இருந்த உன்னத நிலே எப்படி மாறிவிட்டது! நீண்ட விளக்கம் அவசியமில்லே. முன்னே குறிப்பிட்ட காரணம் தான் இதற்கும்.

இந் நிலேமையை நம் நாடடைந்ததற்கு நம் மாட்சி யில்லாததுதான் காரணம். அதற்குப் போதிய ஆதாரங்கள் கொடுத்தாகி விட்டது. இரண்டு முன்னேற்ற மடைந்த தேசங்களுக்கும் நமது தேசத்திற்கும் இருக்கும் ஒற்றுமை வேற்றுமைகளேப் பரிசீலனே செய்தோம். திசை தவறி திண்டாடும் கப்பலுக்குத் தென்பட்ட கலங்கறை விளக்கைப் போன்று ருஷ்யாவும், அமெரிக்காவும்

நமக்கு வழி காட்டுகின்றன. உலகப் போக்கு இந்தியாவை வசீகரித்துக் கொண்டிருக்கிறது. நாம் போக வேண்டிய இடம் நமது கண்ணுக்கு நன்ருகத் தென்படுகிறது. அங்கே சாந்தம், சமாதானம் சமத்துவம், சகோதரத்துவம் குடிகொண்டிருக்கிறது. ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்தள், பார்ஸிகள், சீக்கியர்கள் பௌத்தர்கள், ஜைனர்கள் என்ற வித்தியாசம் காணப்படவில்லை. தொழிலாளி, முதலாளி என்ற பேதம் அங்கில்லை. பட்டினி கிடப்பவன், ஜீரண மாகாதவன் இருவர்களுக்கும் அங்கு இடமில்லை. உரிஞ்சுகிறவன், உரிஞ்சப்படுகிறவன் அங்கே கிடையாது. ஆளுவோன், ஆளப்படுவோன் என்ற சொற்கள் அங்கிருக்கும் அகராதியில் இல்லை. கொலை, களவு, பொய், சூது, வஞ்சகம் அங்கே அழிந்து விட்டது. அங்குள்ளவர்கள் நூற்றுக்கு நூறு படித்தவர்கள். ஒளி படைத்த கண்கள், உறுதிகொண்ட நெஞ்சு, வலிமையுள்ள தோள்கள், ஒடுக்க மற்ற மார்பு, நோயற்ற உடல், பொலிவடைந்த முகம், ஏறு போன்ற நடை இத்தனையும் அங்குள்ள மக்களிடையே காணப்படுகின்றன. ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்கின்றனர். தீண்டலென்ற தீய வழக்கம் அங்கு இடம் பெறவில்லை. வீடில்லாமல் தெருத்திண்ணை ஓரங்களில் சாதஞ் சமைக்கிறவர்களை அங்கே பார்க்கமுடியவில்லை. கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றுகிறவர்களையுங் காணேம். தெருவின் ஓரங்களில் படுத்துத் தூங்குகிறவர்கள் அங்கே செல்ல முடியாது.

பழமை அந்த இடத்தை விட்டு மறைந்துவிட்டது. அச்சமில்லை என்ற அரண் கட்டப்பட்டிருக்கிறது. அவனுக்காக அவனவனே நடக்க வேண்டும். ஒருவனுக்காக மற்றொருவன் அங்கே போக முடியாது. காற்று உனக்குச் சாதகமாக அடிக்கிறது.

"இச்சை கொண்ட நிமிஷமே நிச்சயம் சுதந்திரம்" என்று உலகத்திற்கு (1776-ம் வருஷமே) வழிகாட்டியிருக்கிறது அமெரிக்கா.

இந்தியனே! அந்த அமெரிக்காவைப் பார்,

"'வேண்டும்' என்ற உறுதியே
விடுதலைக்கு வழிவிடும்."

நாமக்கல் கவிஞர்.

ஐக்கிய அமெரிக்காவின் தலைவர்கள்.

1.	ஜார்ஜ் வாஷிங்டன்	1789—1797
2.	ஜான் ஆடம்ஸ்	1797—1801
3.	தாமஸ் ஜபர்ஸன்	1801—1809
4.	ஜேம்ஸ் மேடிஸன்	1809—1817
5.	ஜேம்ஸ் மன்ரோ	1817—1825
6.	ஜான் குவின்ஸி ஆடம்ஸ்	1825—1829
7.	ஆண்ரூ ஜாக்ஸன்	1829—1837
8.	மார்ட்பின் வான் ம்யூரன்	1837—1841
9.	வில்லியம் ஹாரிஸன்	1841 மார்ச், ஏப்பரல்
10.	ஜான் டெய்லர்	1841—1845
11.	ஜேம்ஸ் போல்க்	1845—1849
12.	ஜாக்கிரி டெய்லர்	1849—1850
13.	மில்லர்டு பில்மோர்	1850—1853
14.	பிராங்லின் பியர்ஸ்	1853—1857
15.	ஜேம்ஸ் புக்கானனன்	1857—1861
16.	அப்ரஹாம் லிங்கன்	1861—1865
17.	ஆண்ரூ ஜான்ஸன்	1865—1869
18.	உலிஸீஸ் கிராண்ட்	1869—1877
19.	ருதர்போர்டு ஹெய்ஸ்	1877—1881
20.	ஜேம்ஸ் கார்பீல்டு	1881 மார்ச்—ஸெப்டம்பர்.
21.	செஸ்டர் ஆர்தர்	1881—1885
22.	குரோவர் கிளீவ்லண்டு	1885—1889
23.	பென்ஜமின் ஹாரிஸன்	1889—1893
24.	குரோவர் கிளீவ்லண்டு	1893—1897
25.	வில்லியம் மேக்கின்லி	1897—1901

26.	தியோடர் ரூஸ்வெல்ட்	1901—1909
27.	வில்லியம் டாப்ட்	1909—1913
28.	உட்ரோ வில்ஸன்	1913—1921
29.	வாரன் ஹார்டிஞ்ச்	1921—1923
30.	கால்வின் கூலிட்ஜ்	1923—1929
31.	ஹெர்பர்ட் ஹூவர்	1929—1933
32.	பிராங்லின் டி. ரூஸ்வெல்ட்	1933—

ஜனாதிபதி ரூஸ்வெல்ட்

பிராங்லின் டிலானோ ரூஸ்வெல்ட் என்பது அவருடைய முழுப் பெயர். நியு யார்க் மாகாணத்தைச் சேர்ந்தவர். 1882 வருஷம் ஜனவரி மாதம் 30ம் தேதி நியு யார்க் நகரில் பிறந்தார். ஹாவர்டு சர்வகலாசாலையில் கல்வி பயின்று, கொலம்பியா சர்வகலாசாலையின் சட்டப் பள்ளியில் சட்டப் பயிற்சி பெற்றார். 1910 முதல் 1913 வரை செனேட் அங்கத்தினராக இருந்தார். 1913 முதல் 20 வரை கடற் படையின் உதவி காரியதரிசி பதவி வகித்தார். 1928ம் வருஷத்திலும், 1930ம் வருஷத்திலும் (இரு முறை) நியுயார்க் மாகாணத்தின் கவர்னராகத் தேர்ந் தெடுக்கப் பட்டார். 1933ம் வருஷம் மார்ச் மாதம் 4ம் தேதி ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந் தெடுக்கப் பட்டார். இரண்டாம் முறையாக 1937 ஜனவரி 20ம் தேதியும் மூன்றும் முறையாக 1941 ஜனவரி 20ம் தேதியும் ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இன்றும் அவரே தான் தலைவர்.

அமெரிக்க உற்பத்தி

உலக விகிதத்தில்

பெட்ரோல்	...	71	%
நிலக்கரி	...	43	%
மோட்டார்கள்	...	81	%
இரும்பு	...	49	%
பருத்தி	...	41	%
புகையிலை	...	28	%
கோதுமை	...	16	%
இயந்திரங்கள்	...	80	%

சம்பள விகிதம்.

மாதச் சம்பளம்

	ரூ.	அ.	பை
இந்திய வைஸ்ராய்	21,333	5	0
ஐக்கிய அமெரிக்கத் தலைவர்	17,062	8	0
பிரிட்டிஷ் பிரதம மந்திரி	11,111	1	9
ஜப்பான் பிரதம மந்திரி	622	0	0
இந்திய வைஸ்ராய் நிர்வாக சபை அங்கத்தினர்.	6666	10	8
ஐக்கிய அமெரிக்கத் தலைவர் மந்திரி சபையின் ஒரு மந்திரிக்கு	3412	8	0
பிரிட்டிஷ் மந்திரி சபையின் ஒரு மந்திரிக்கு	5555	8	11
ஜப்பானிய மந்திரி சபையின் ஒரு மந்திரிக்கு	440	9	4

அமெரிக்கா (U. S. A.)

நிலப்பரப்பு 30 லட்சம் சதுர மைல். அமெரிக்காவின் பாதுகாப்பின் கீழ் இருக்கும் நாடுகளின் நிலப்பரப்பு 7½ லட்சம் சதுர மைல். ஜனத்தொகை 13 கோடி. 48 சிறு நாடுகள் கொண்ட ஒரு ஐக்கியம். வாஷிங்டன் அதன் தலைநகரம். கொலம்பியா ஜில்லாவில் இருக்கிறது.

சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அமைப்பு. முக்கியமான தேசீய வேலைகள் யாவும் சிறு நாடுகளின் முடிவின் பேரில்தான் நடைபெறுகின்றன. சமஷ்டி அரசாங்கம் காங்கிரஸால் நடத்தப் படுகிறது. கீழ்ச் சபை 435 அங்கத்தினர்களைக் கொண்டது. செனேட் 96 அங்கத்தினர்கள் அடங்கியது. செனேட்டிற்கு மேல் சபை யென்றும், பிரதிநிதிகள் சபைக்கு கீழ்ச்சபை என்றும் சொல்லலாம்.

பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர்கள் சிறு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவார்கள். செனெட்டுக்கு ஒரு சிறு நாட்டிற்கு இரண்டு பேர் விகிதம் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்படுவோர் 6 வருஷ காலம் பதவி வகிக்கலாம். மூன்றில் ஒரு பாகத்தினர்களுக்கு இரண்டு வருஷங்களுக்கொரு தடவை தேர்தல் நடைபெறும். ஐக்கிய அமெரிக்காவின் உப-தலைவர் செனேட்டுக்குத் தலைவராக இருப்பார்.

எந்த மசோதாவையும், எந்த சபையில் வேண்டுமானாலும் கொண்டு வரலாம். ஆனால் நில வரி சம்பந்தமான மசோதாக்களை பிரதிநிதிகள் சபையில் தான் கொண்டு வர முடியும். மசோதாக்கள் இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப் பட வேண்டும்.

நிர்வாக அதிகாரம் ஐக்கிய அமெரிக்காவின் தலைவருக்குத் தான் உண்டு. தலைவர் நான்கு வருஷத்திற் கொரு முறை தேர்ந்தெடுக்கப் படுவார். பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். காங்கிரஸினால் நிறைவேற்றப்படும் மசோதாக்களை நிராகரிக்கும் அதிகாரம் தலைவருக் குண்டு. மூன்றில் இரண்டு மடங்கு ஓட்டுகள் இருக்கும் மசோதாவை தலைவர் நிராகரிக்க முடியாது. பிரஞ்சுக் குடியரசின் (யுத்தத்திற்கு முன்) தலைவரைப் போலில்லாமல் ஐக்கிய அமெரிக்காவின் தலைவருக்குப் பல பிரத்தியேகமான அதிகாரங்கள் உண்டு.

அமெரிக்க அரசியல் அமைப்பு காங்கிரஸிற்கும் தலைவருக்கு மிடையே சம சக்தி இருக்கும் படியான நிலையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தலைவரே தான் பிரதம மந்திரியும். மந்திரி சபையை அமைக்கத் தலைவருக்குத் தான் அதிகாரமுண்டு. அமெரிக்காவில் நடைபெறும் ஆட்சி சட்டசபை முறையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியல்ல.

அவசியப் பட்ட எந்தத் திட்டத்தையும் தலைவர் காங்கிரஸிற்குச் சிபார்சு செய்யலாம். அயல் நாட்டின் விவகாரங்களில் அதிக சம்பந்த முடையது மேல் சபைதான். அதன் யோசனை அல்லது சம்மதத்தின் பேரில் தலைவர் அயல் நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். யுத்தத்தில் சேருவதென்றால் காங்கிரஸின் சம்மதம் வேண்டும். ஒரே தலைவரை எத்தனைமுறைவேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். இரு முறைகளுக்குமேல் தேர்ந்தெடுப்பதில்லை யென்ற வழக்க மிருந்தது. அவ்வழக்கத்திற்கு மாறாக ரூஸ்வெல்ட் மூன்றாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஐக்கிய அமெரிக்க அரசியலின் நிரந்தரத் தன்மை நீதி மன்றங்களின் திடமான முடிவைப் பொருத்திருக்கிறது. உயர்தர நீதி மன்றம் (ஸுப்ரீம் கோர்ட்) ஒரு சட்டத்தை நிராகரிக்குமானால் அந்த சட்டம் செல்லுபடி யாகாது. நீதி மன்றங்களின் அதிகாரம் அரசாங்கத்தின் மூன்றாவது பிரிவாக இருக்கிறது. முதல்பிரிவு காங்கிரஸ், இரண்டாவது பிரிவு தலைவர். சட்டங்களின் தலைவிதியை நிர்ணயிப்பது நீதி மன்றங்களின் கையில் தான் இருக்கிறது.

சிறு நாடுகள்

ஒவ்வொரு சிறு நாடும் இரண்டு சட்டசபைகளையும், ஒரு தேர்ந்தெடுக்கப் பட்ட கவர்னரையும் உடையது. 1,78,000 பேர்களைக்கொண்ட

நிரந்தர ராணுவமும், வேண்டு மென்றபோது சேர்த்துக் கொள்ளக் கூடிய தேசீய பாதுகாப்புப் படையும் இருக்கின்றன. இவை சமாதான காலங் களில் கவர்னரின் ஆளுகைக் குள்ளிருக்கும்; யுத்த காலங்களில் தலைவரின் ஆளுகைக் குள்ளிருக்கும் ஐக்கிய அமெரிக்க ராணுவத்தோடு சேர்க்கப் பட்டு விடும். ஒவ்வொரு சிறு நாட்டின் தேசீய பாதுகாப்புப் படையிலும் 1,92,000 பேர் இருக் கிறார்கள். மூன்று வருஷத்திற் கொரு முறை தேசீய பாதுகாப்புப் படைக்கு ஆட்களைப் பொரு க்கி யெடுப்பார்கள்.

ராணுவம்

சாதாரண காலத்தில் 10 லட்சம் பேர்களைக் கொண்ட நன்கு பயிற்சி யளிக்கப்பட்ட ராணு வம் இருக்கிறது.தற்பொழுது 1917 வருஷ ராணு வச் சட்டப்படி 240 லட்சம் பேரை ராணுவத் திற்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

கப்பற் படை

அமெரிக்கக் கடற் படை உலகத்தில் இரண் டாவது ஸ்தானத்திலிருக்கிறது. 1921 வருஷ வாஷிங்டன் ஒப்பந்தப்படி பிரிட்டிஷ்-அமெரிக்க கடற் படைகள் சமமாக இருக்கவேண்டும். அந்த ஒப்பந்தத்தில் சரியாக கவனத்தைச் செலுத்தாத தால் அமெரிக்கக் கடற்படையைக் காட்டிலும் பிரிட்டிஷ் கடற்படை அதிக டன்னேஜ் உடைய தாக ஆகிவிட்டது. (அமெரிக்கா யுத்தத்தில்

இறங்குமுன்) 15 யுத்தக்கப்பல்கள், 17 குரூய்ஸர்கள், 16 சிறிய குரூய்ஸர்கள், 206 நாசகாரிகள், 89 நீர் மூழ்கிக் கப்பல்கள், 5 விமானம்தாங்கி கப்பல்கள் உண்டு. (யுத்த காலத்தில் கடற் படை வேகமாகப் பெருக்கப் படுகிறது.)

பெரிய ஆகாய விமானப் படையும் உண்டு.

அயல் நாட்டினர்

அமெரிக்காவிற்குள் ஒரு வருஷத்திற்கு 1,54.000 அயல் நாட்டினர் போகலாம். பிரிட்டன் அயர்லாந்து, ஜெர்மனி, வடக்கு ஐரோப்பிய தேசத்தவர்கள் அதிக சத விகிதம் போகலாம். இதர நாட்டினர் குறைவான சத விகிதம் தான் செல்ல முடியும். அமெரிக்கா கண்டத்தின் இதர பாகங்களிலுள்ளவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றிப் போகலாம்.

கட்சிகள்

அமெரிக்காவில் பல கட்சிகள் உண்டு. இரண்டு கட்சிகள் தான் குறிப்பிடத் தக்கவை. டெமாக்கிரடிக் கட்சி, ரிபப்ளிகன் கட்சி என்பது அவற்றின் பெயர்கள். ஒன்றிரண்டு அங்கத்தினர்களை யுடைய சில சிறு கட்சிகளும் உண்டு. முன்னேற்றக் கட்சி, விஸ்கன்ஸின் கட்சி, விவசாயத் தொழிலாளர் கட்சி, அமெரிக்கத் தொழிலாளர் கட்சி என்பன அவற்றின் பெயர்கள். ஸோஷியலிஸ்ட், கம்யூனிஸ்ட்டு இயக்கங்களும் அங்கு வளர்ச்சி யடைந்து வருகின்றன. மேல்

அல்லது கீழ் சபைகளில்இவ்விரு இயக்கங்களின் பிரதி நிதிகள் இல்லை.

சுமார் 80 வருஷ காலமாக, டெமாக்கிரட்டிக், ரிபப்ளிகன் கட்சிகளே மாறி மாறி அதிகாரம் வகித்து வருகின்றன.

நிர்வாகப் போக்கு

ஒரு கட்சியாரிடமிருந்து மற்ருெரு கட்சியார் அதிகாரத்தைக்கைப்பற்றினுல் அவர்களால் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட அதிகாரிகள் விலக்கப் பட்டு தங்கள் கட்சியைச்சேர்ந்தவர்கள் நியமிக்கப் படுவார்கள். ஒவ்வொரு சிறு நாட்டிலும் கட்சிகளின் ஏஜெண்டுகள் உண்டு. அவர்கள் சிறு நாடுகளின் ஆட்சியில் மிகச் செல்வாக்கு வாய்ந்தவர்களாகவும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருக்கிருர்கள். எந்தக்கட்சி அதிகாரத்திலிருக்கிறதோ அக்கட்சியின் கொள்கைப்படி ஒவ்வொரு சிறு நாடும் மாறி விடுகிறது.

பொது நிலை.

அமெரிக்காவுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் யாவும் தன் எல்லைக்குள்ளே கிடைக்கின்றன. இதர சாமான்களும் வேண்டிய அளவுக்கதிகமாக உற்பத்தி செய்யப் பட்டு உலகத்தின் பல பாகங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

முதல் மகா யுத்தம் (1914—1918) அமெரிக்காவை உலகத்திலேயே மிகப் பெரிய பணக்கார

தேசமாகவும் சக்திவாய்ந்த தேசமாகவும் செய்து விட்டது. இன்று நடைபெறும் இரண்டாவது மகாயுத்தம் அதை நிரூபிக்கிறது.

பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் வியாபாரத்திலும், உலகப் பொருளாதாரத்தில் முதன்மை ஸ்தானம் பெறுவதிலும் பலத்த போட்டி ஏற்பட்டது. 1929ம் வருஷம் ஹூவர்—மாக்டொனல்ட் ஒப்பந்தம் இரு நாட்டினரிடையேயும் யுத்தம் ஏற்படாமல் தடுத்தது.

அடுத்த தற்காலப் பிரச்னைப் புத்தகங்களை
எழுதுகிறவர்கள்

1. நாடோடி
2. எல். சட்டநாதக் கரையாளர்
3. சி. என். முத்துரங்க முதலியார்
4. வி. ராமமூர்த்தி
5. வ. ரா.

நாமக்கல் புரட்சிக் கால புன்னகைக் கவி
வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களின்
அடுத்த புத்தகங்கள்

1. அவளும் அவனும்

(கவிதை)

2. என் கதை

(வசனம்)

3. சங்கொலி

(கவிதை)

4. கவிஞர் பேச்சு

(வசனம்)

தமிழ்ப் பெரியார்கள்

வ. ரா.

எழுதிய பேனுச் சித்திரம்

விலை ரூ. 2-8-0

சுதந்திர முழக்கம்

வெ. சாமிநாத சர்மா

எழுதிய அருமையான புத்தகம்

விலை ரூ. 1-4-0

எல்லா விதமான தமிழ்
ஆங்கிலப் புத்தகங்களும்
எங்களிடம் கிடைக்கும்

சக்தி

மாத வெளியீடு

ரூ. 6/-
வருடசந்தா

சக்தி காரியாலயம்

டெலிபோன் 4536 தபால்பெட்டி 1361

261. சைனபஜார் – சென்னை

பிராஞ்சு வடக்கு வெளி வீதி-மதுரை.